தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Inclusion of Rajakkamangalam Circle in Thuckalay Educational District.

*147. Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether complaints have been received from the public and panchayats regarding the inclusion of Rajakkamangalam Circle which was in Nagercoil Educational District, in Thuckalay Educational District; and

(*b*) if so, the action taken thereon?

தக்கலைக் கல்வி மாவட்டத்துடன் இராசாக்கமங்கலம் சரகம் சேர்க்கப்படல்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நாகர்கோவில் கல்வி மாவட்டத்துடன் இருந்த இராசாக்கமங்கலம் சரகம், தக்கலைக் கல்வி மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டதையொட்டி ஊராட்சி மன்றங்களிலிருந்தும், பொது மக்களிடமிருந்தும் புகார்கள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இராசாக்கமங்கலம் சரகத்தை தக்கலை கல்வி மாவட்டத்திலிருந்து பிரித்து, நாகர்கோவில் கல்வி மாவட்டத்துடன் இணைப்பதற்கில்லையென ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் கல்வி மாவட்டம், தக்கலை கல்வி மாவட்டம் என்று இரண்டு இருந்ததை குழித்துறை கல்வி மாவட்டத்துடன் சேர்த்து மூன்ருகப் பிரிக்கிறபோது அந்தச் சரக சீரமைப்பிலே நாகர்கோவில் கல்வி மாவட்டத்தோடு இருந்த ராஜாக்கமங்கலம் சரகத்தை தக்கலையோடு சேர்த்திருக்கிருர்கள். ராஜாக்கமங்கலம் சரகம், நாகர்கோவில் சரகத்தில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களோ மற்றவர்களோ முதலில் நாகர்கோவிலுக்கு வந்து அதற்குப் பிறகு 10 மைல் தக்கலைக்குப் போக வேண்டும். ஏனென்ருல் நாகர்கோவிலுக்குத் தெற்கே கடற்கரையையொட்டி அந்தப் பகுதி அமைந்திருக்கிறது. அவர்கள் நேரடியாகத் தக்கலைக்குப் போக முடியாது. ஆக, நாகர்கோவிலோடு இருப்பதுதான் சிறப்பாக அமையும் என்றும், வசதியாக இருக்கும் என்றும் அங்குள்ள பஞ்சாயத்துக்களும் பொதுமக்கள், ஆசிரியர் ஆகிய அனைவரும் வந்து முறையீடு செய்திருக்கிருர்கள். எனவே, அரசு இதைத் திரும்பப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தக்கலை, நாகர்கோவில் கல்வி மாவட்டங்களின் வேலைப் பளுவைக் குறைக்கவே குழித்துறைக் கல்வி மாவட்டம் தனியாக ஆரம்பிக்கப்பட்டது. ஆக மூன்று கல்வி மாவட்டங்கள் வருகின்றபோது வேலைப்பளு சமமாக ஆகிவிடும். அந்த நிலையில்தான் நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலிருந்து பிரித்து இந்தச் சரகம் குழித்துறை கல்வி மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது. அதை மறுபடியும் நாகர்கோவிலோடு இணைக்க வேண்டுமென்ருல் வேறு ஏதேனும் ஒரு சரகத்தை குழித்துறையுடன் இணைக்க வேண்டும். எந்தச் சரகத்தை எப்படி எடுத்து இணைக்கலாம் என்று முடிவு செய்வார்களேயானுல், அதுபற்றி யோசிக்கலாம். இல்லாவிட்டால் ஒன்றில் வேலைப்பளு அதிகமாகவும், இன்ஞென்றில் வேலைப்பளு குறைவாகவும் இருக்கும் நிலை ஏற்படும். வேலைப்பளு சமமாக இருக்க வேண்டுமென்றுதான் இவ்வாறு செய்யப்பட்டது. புதுக் கல்வி மாவட்டம் என்று வரும்போது, இரண்டு மாவட்டங்களிலிருந்தும் பிரித்து எடுத்துதான் இவ்வாறு புதிதாக ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. ஆக, எந்தெந்த சரகங்களை—ஆனுல் சமமாக வேலைப்பளு இருக்கும் விதத்தில் அமைய வேண்டும்; மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும்—எதனுடன் இணைக்கலாம் என்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான யோசனைகள் வருமேயானுல், அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, வேலைப்பளு சமமாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களும், 4 நகரங்களும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலிருந்து இந்த ராஜாக்கமங்கலம் யூனியனைப் பிரித்துவிட்டதால், இரண்டு யூனியன்கள்தான் அதில் இருக்கின்றன. ஒரு நகரம் இருக்கிறது. அதே நேரத்தில் தக்கலை கல்வி மாவட்டத்தில் இரண்டு நகரங்களும், 4 யூனியன்களும் வருகின்றன. வேலைப்பளுவை அடிப்படையாக வைத்தால் கூட, நாம் சொல்லுவதுதான் சரியாக இருக்கும். ஆனுல் இங்கு சென்னையிலே கல்வி இலாக்கா அலுவலகத்தில் இருந்துகொண்டு

படத்தை வைத்துக் கொண்டே, அந்த ஊர்களின் இருப்பிடம் தெரியாமல் பிரித்ததனால்தான் இவ்வாறு ஏற்பட்டது. மேலும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் கணக்கில் வைத்துக் கொண்டு, 27 பள்ளி, 27 பள்ளி என்று பிரித்திருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளிகளினுடைய வேலைப் பளு இதோடு சேர்க்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளு கிறேன். எனவே, அரசு புனர் பரிசீலனை செய்ய உத்தரவிட வேண்டு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் கூறிய படி, இந்த மூன்று மாவட்டங்களினுடைய பெயர்களை வேண்டுமானால் எடுத்துவிடுவோம். மொத்தம் மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும். எதையெதை எடுத்துக் கொண்டு, எதையெதை வைத்துக் கொண்டு மூன்று கல்வி மாவட்டங்கள் அமைக்கலாம் என்று உறுப்பினர் அவர்கள் யோசனை சொல்லலாம். குழித்துறை என்று கூட வேண்டாம், வேறு ஒரு பெயர் வேண்டுமானால் சொல்லுங்கள். மூன்று கல்வி மாவட்டங்கள் அமையும் வண்ணம், அவற்றில் சமமான வேலைப்பளு வாத் தக்க அளவுக்கு, பிரித்துத் தருகின்ற ஒரு யோசனை தருவார்களேயானால் மறுபடியும் இதை யோசிக்கலாம். தக்கலை, நாகர்கோவில், குழித்துறை என்பதையெல்லாம்கூட எடுத்துவிட்டு, விளவங்கோடு என்ற பெயர்கள் கூட போடலாம். பெயரைப்பற்றிக் கவலையில்லை. மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும். அதற்குக் கீழே வேலைப்பளு சமமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். வேறு ஏதாவது முறையில் மாற்றியமைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கருதப்படுமானால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஒரு யோசனை அதற்காகத் தந்தால், அதைப்பற்றி ஆராய் வதற்கு முயற்சி செய்யலாம்.

Lalgudi Educational District

*148 Q. THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether it is a fact that the Headmasters' Association of Turaiyur Taluk in Tiruchirappalli District has represented to Government to reallocate the newly formed Lalgudi Educational District; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

லால்குடி கல்வி மாவட்டம்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—